எளிய முறை

# தமிழ் இலக்கண வினா விடை

## பகுதி I.

14 OCT 1946

ஆக்கியோர்:
வித்துவான். V. குஞ்சிதபாதம்
வித்துவான். M. R. கந்தசாமி
தமிழாசிரியர்,
தீர்த்தபதி ஹைஸ்கூல்,
அம்பாசமுத்திரம்.

963

1946.

பதிப்புரிமை

எளிய முறை

# தமிழ் இலக்கண வினு விடை.

## I. எழுத்து.

1. "எழுத்து"- என்பது என்ன?

ஒரு சொல் எழுவதற்குக் காரணமான ஒலி எழுத்தாகும்.

2. எழுத்திற்குரிய வடிவங்கள் எவை? விளக்குக.

எழுத்திற்குரிய வடிவங்கள் இரண்டு.

i. ஒலி வடிவு: [வாயால் உச்சரிக்கும் போதுள்ள வடிவம்]

ii. வரி வடிவு; [ஒலிக்கு அடையாளமாகக் கையால் எழுதும் வடிவம்.]

3. தமிழிலுள்ள எழுத்துக்கள் மொத்தம் எத்தனை? எவ்வாறு?

| | |
|---|---|
| உயிரெழுத்து | 12 |
| மெய்யெழுத்து | 18 |
| உயிர் மெய் எழுத்து | 216 |
| ஆய்த எழுத்து | 1 |
| ஆக மொத்தம் எழுத்துக்கள் | 247 |

4. தமிழ் எழுத்துக்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? எங்ஙனம்?

இருவகையாகப் பிரிக்கலாம்.

i. முதல் எழுத்து. ii. சார்பெழுத்து.

5. "முதல் எழுத்து"- என்பது என்ன?

தமிழுக்கு முதற் காரணமான எழுத்தாம்.

6. முதல் எழுத்து எத்தனை வகைப்படும்? எங்ஙனம்?

இரு வகைப்படும்.

i. உயிர் எழுத்து. ii. மெய் எழுத்து.

## உயிரெழுத்து.

**7.** 'உயிர் எழுத்து' பெயர்க்காரணம் என்ன?

நமது உயிர் தனியாகவும், உடலுடன் சேர்ந்தும் சஞ்சரிப்பதுபோல் உயிர் எழுத்து தனியாகவும், மெய்யெழுத்துடன் கூடியும் வருகிறது. ஆகவே உயிர் போன்று இருக்கும் எழுத்து ஆதலின் உயிர் எழுத்து எனப்பட்டது.

**8.** உயிர் எழுத்து எத்தனை வகைப்படும்? எங்ஙனம்?

உயிரெழுத்து இருவகைப்படும்.

i. குறில். ii. நெடில்.

**9.** குற்றெழுத்துக்கள் எத்தனை? அவை எவை?

குற்றெழுத்துக்கள் ஐந்தாம்.

அவை: அ, இ, உ, எ, ஒ, என்பன.

**10** நெட்டெழுத்துக்கள் எத்தனை? அவை எவை?

நெட்டெழுத்துக்கள் ஏழு.

அவை: ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ. ஔ, என்பன.

**11.** குறில், நெடில்—இவற்றின் பெயர்க்காரணங்கள் யாவை?

குறில்—நெட்டெழுத்தை நோக்கக் குறுகிய ஓசையுடையது.
நெடில்—குற்றெழுத்தை நோக்க நீண்ட ஓசையுடையது.

**12.** சுட்டெழுத்து என்றால் என்ன?

ஒரு பொருளைச் சுட்டிக்காட்டும்போது வரும் எழுத்தாம்.

**13.** சுட்டெழுத்துக்கள் எவை?

அ, இ, உ என்னும் மூன்றெழுத்துக்களும் ஆகும்.

**14.** வினா எழுத்து என்றால் என்ன?

வினா (கேள்வி)ப் பொருளில் வரும் எழுத்தாம்.

15. வினு வெழுத்துக்கள் எவை?

எ. யா. ஆ. ஓ. ஏ. என்ற ஐந்தெழுத்துக்களுமாகும்.

## மெய் எழுத்து.

16. "மெய் யெழுத்து"-பெயர்க் காரணம் என்ன?

உடம்பு உயிரின் உதவி இல்லாமல் தனித்து நடவாதது போல் மெய்யெழுத்து உயிர் எழுத்தின் உதவி இல்லாமல் நடவாது. ஆகவே மெய் (உடம்பு) போன்று இருக்கும் எழுத்தாதலின் மெய்யெழுத்து எனப்பட்டது.

17. மெய்யெழுத்து எத்தனை வகைப்படும்? எங்ஙனம்?

மெய்யெழுத்து மூன்று வகைப்படும்.

i. வல்லினம். ii. மெல்லினம். iii. இடையினம்.

18. வல்லின மெய்கள் எவை?

க், ச், ட், த், ப், ற்,— என்ற ஆறுமாம்.

19. மெல்லின மெய்கள் எவை?

ங், ஞ், ண், ந், ம், ன்— என்ற ஆறுமாம்.

20. இடையின மெய்கள் எவை?

ய், ர், ல், வ், ழ், ள்,— என்ற ஆறுமாம்.

21. வல்லினம், மெல்லினம், இடையினம் இவற்றின் பெயர்க் காரணங்கள் யாவை?

வல்லினம்—மற்ற மெய்யெழுத்துக்களை விட வலிய ஓசை யுடையவை.

மெல்லினம்—மெலிய ஓசை உடையவை.

இடையினம்—வல்லினம் போல் வலிய ஓசையும், மெல்லினம் போல் மெலிய ஓசையும் இன்றி இடைத்தரமான ஓசை யுடையவை.

22. "சார்பெழுத்து" என்றால் என்ன?

எழுத்தையாவது, சொல்லையாவது சார்ந்து வரும் எழுத்தாம்.

23. சார்பெழுத்து எத்தனை வகைப்படும்? எங்ஙனம்?

சார்பெழுத்து பத்து வகைப்படும்.

1. உயிர் மெய் 2. ஆய்தம், 3. உயிரளபெடை, 4. ஒற்றளபெடை, 5. குற்றிய லிகரம், 6. குற்றியலுகரம், 7. ஐகாரக் குறுக்கம், 8. ஔகாரக் குறுக்கம், 9 மகரக்குறுக்கம், 10. ஆய்தக் குறுக்கம் என்பனவாம்.

உயிர் மெய் எழுத்து.

24 "உயிர் மெய் எழுத்து" என்றால் என்ன? விளக்குக.

உயிரும் மெய்யும் சேர்வதால் உண்டாகும் எழுத்தாம். உ-ம். க்—மெய். அ—உயிர் இவ்விரண்டும் சேர்தலால் 'க' என்ற உயிர் மெய் உண்டாகிறது. [உயிர் மெய் எழுத்தில் மெய்யெழுத்தின் ஒலி முன்னும், உயிரெழுத்தின் ஒலி பின்னும் ஒலிக்கும்.]

25. உயிர் மெய் எழுத்து மொத்தம் எத்தனை? விளக்குக.

உயிர் மெய் எழுத்து மொத்தம் 216. பதினெட்டு மெய்யின் மேலும் பன்னிரண்டு உயிரும் தனித்தனி சேர்வதால் உண்டாகும். [18 × 12 = 216]

26. உயிர் மெய்க் குற்றெழுத்து எத்தனை? எங்ஙனம்?

உயிர் மெய்க் குறில் 90. பதினெட்டு மெய்யின்மேலும் ஐந்து குற்றெழுத்தும் தனித்தனி சேர்வதால் உண்டாகும். [18 × 5 = 90.]

27. உயிர் மெய் நெட்டெழுத்து எத்தனை? எங்ஙனம்?

உயிர்மெய் நெட்டெழுத்து 126. பதினெட்டு மெய்யின் மேலும், ஏழு நெட்டெழுத்தும் தனித்தனி சேர்வதால் உண்டாகும். [18 × 7 = 126.]

28. உயிர் மெய் வல்லெழுத்து எத்தனை? எங்ஙனம்?

உயிர் மெய் வல்லெழுத்து 72. வல்லின மெய் ஆறின் மேலும், பன்னிரண்டுயிரும் தனித்தனி சேர்வதால் உண்டாகும். [6 × 12 = 72.]

29 உயிர் மெய் மெல்லெழுத்து எத்தனை? எங்ஙனம்?

உயிர் மெய் மெல்லெழுத்து 72. மெல்லின மெய் ஆறின் மேலும், பன்னிரண்டுயிரும் தனித்தனி சேர்வதால் உண்டாகும். [6 × 12 = 72]

30 உயிர் மெய் இடையெழுத்து எத்தனை? எங்ஙனம்?

உயிர் மெய் இடையெழுத்து 72. இடையின மெய் ஆறின் மேலும், பன்னிரண்டுயிரும் தனித்தனி சேர்வதால் உண்டாகும். [6 × 12 = 72]

### ஆய்த எழுத்து.

31. "ஆய்த எழுத்து" என்றால் என்ன?

கேடகம் என்ற ஆயுதம் போல் மூன்று புள்ளி வடிவாய் வரும் எழுத்தாம்.

32. ஆய்தம் எவ்வெழுத்துக்களைத் துணைக்கொண்டு வரும்? உதாரணம் தருக.

முன்னே[1] ஒரு குற்றெழுத்தையும், பின்னே[2] உயிர் மெய் வல்லெழுத்தையும் துணைக்கொண்டு இவ்விரண்டெழுத்துக்களின் நடுவிலும் வரும். உ-ம். அ[1]ஃது[2].

## குற்றியலுகரம்.

33. "குற்றியலுகரம்" என்பதன் பொருள் யாது?

தனக்குரிய ஒலியின் அளவு குறைந்த தன்மையுள்ள உகரம் என்பதாம்.

34. குற்றியலுகரத்தை எவ்வாறு அறியக்கூடும்?

1. ஒரு சொல்லின் கடைசியில் வல்லின மெய்யின் மேல் உகரம் சேர்ந்துவரும். 2. குற்றியலுகர எழுத்து தனக்கு முன்னே தனிக் குற்றெழுத்தைச் சாராது வரும். இவற்றால் அறியலாம்.

35. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? எங்ஙனம்? உதாரணங்கள் தருக.

குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

1. நெடில் தொடர் — ஏடு.
2. ஆய்தத் தொடர் — அஃது.
3. உயிர்த் தொடர் — அரசு.
4. வன் தொடர் — முத்து.
5. மென் தொடர் — சங்கு.
6. இடைத் தொடர் — மார்பு.

36. குற்றியலுகரம்-தொடர் பிரிக்கப்படுவது எங்ஙனம்?

சொல்லின் கடைசி எழுத்திற்குப் பக்கத்திலுள்ள எழுத்து எவ்வெழுத்தாய் இருக்கிறதோ அதைக்கொண்டு பிரிக்கவேண்டும்.

37. நெடில் தொடர்க்கும் உயிர்த் தொடர்க்கும் உள்ள வேறுபாடு என்ன?

நெடில் தொடர் இரண்டே எழுத்தால் ஆகிய சொல்லாய் முதல் எழுத்து நெடிலாய் இருக்கும். உயிர்த்தொடர் இரண்டின் மேற்பட்ட எழுத்துக்களால் ஆகிய சொல்லாய் இருக்கும்.

## குற்றிய லிகரம்.

38 "குற்றியலிகரம்" என்பதன் பொருள் யாது?

தனக்குரிய ஒலியின் அளவு குறைந்த தன்மையுள்ள இகரம் என்பதாம்.

39. குற்றியலிகரத்தை எவ்வாறு அறியக்கூடும்? உதாரணம் தந்து விளக்குக.

குற்றியலுகரம் முதலில் நிற்க அதன் எதிரே யகரத்தை முதலிற்கொண்ட சொல்வரின், அவ்வுகரம் இகரமாக மாறும். அந்த இகரம் நன்கு உச்சரிக்க முடியாது. மேலும், "மியா" என்ற அசைச் சொல்லில் (மி-என்பதில்) உள்ள இகரமும் நன்கு உச்சரிக்க முடியாது. அவ்வாறு உச்சரிக்க முடியாமையால் இகரத்திற்குரிய ஒலியின் அளவு குறைகிறது. இவற்றால் அறியலாம்.

உ-ம். நாடு+யாது = நாடியாது. கேண்மியா.

"நாடு"—குற்றியலுகரம், இதன் எதிரே "யாது" என்ற யகரம் முதலாகிய சொல் வர ' நாடு" என்பதில் உள்ள 'உ'காரம் 'இ'காரமாக மாறுகிறது.

## போலி.

40. "போலி" என்பது என்ன? உதாரணம் கொண்டு விளக்குக.

ஒரு சொல்லில் ஒரெழுத்து நிற்க வேண்டிய இடத்தில் வேறோர் எழுத்து நின்றாலும் பொருள் வேறு படாமல் இருப்பது போலியாம்.

உ—ம். மரம் = மரன். மகரத்திற்கு னகரம் வந்தது. ஆனால் பொருள் ஒன்றே.

41. போலியின் வகை எத்தனை? எங்ஙனம்? உதாரணம் வேண்டும்.

i. மொழி முதற் போலி. உ-ம். மயல் = மையல்.
ii மொழி இடைப் போலி உ-ம் நிலயம் = நிலையம்.
iii. மொழிக் கடைப் போலி. உ-ம். நிலம் = நிலன்.

## II. சொல்.

42. சொல்லாவது யாது? உதாரணந் தந்து விளக்குக.

ஓர் எழுத்தாலோ, அல்லது பல எழுத்துக்களாலோ ஆகி ஒரு பொருளைத் தருவது சொல்லாகும்.

"பூ"-இது மலரைக் குறிக்கும்போது ஓரெழுத்தாலாகிய சொல். எழுத்தைக் குறித்தால் எழுத்தாம்.
"பூனை"-இது இரண்டெழுத்துக்களாலான சொல்.

43. தமிழிலுள்ள சொற்கள் எவை?

தமிழிலுள்ள சொற்கள் மூன்று; அவை:
i. தமிழ்ச் சொல். ii திசைச் சொல். iii. வட சொல்.

44. தமிழ்ச் சொல் என்பது எது?

வேற்று மொழியிலிருந்து வாராது தமிழுக்கே உரிய சொல்லாகும்.

45. "திசைச் சொல்"-என்பது எது? விளக்குக.

தமிழ் தவிர்ந்த வேறு மொழிகளிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொல்லாகும். [வேற்று மொழிச் சொற்களைத் தமிழில் எழுதினால் அது திசைச் சொல்லாய் விடும்.]
செப்பு=கூறு: இது தெலுங்கிலிருந்து தமிழில் வந்தது.
'ரயில்'-இது ஆங்கிலத்திலிருந்து தமிழில் வந்து வழங்குவது.

46. "வட சொல்" என்பது எது? விளக்குக.

ஆரிய (சமஸ்கிருத) மொழியிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொல்லாகும்.
உ-ம். கமலம்: இது ஆரியத்திலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொல்.

47. வட சொல்லை ஏன் திசைச் சொல்லுள் அடக்கவில்லை?

i. தமிழில் வழங்கும் வேற்று மொழிச் சொற்களுள் ஆரியச் சொற்களே மிகுதியானவை.

ii. தமிழுடன் ஒத்தபெருமையும் பழைமையும் உடையது. ஆதலின் அடக்கவில்லை.

48. தமிழ்ச் சொற்கள் எத்தனை வகைப்படும்? எவை?
தமிழ்ச் சொற்கள் நால்வகைப்படும். அவை:
i. பெயர்ச்சொல். ii. வினைச்சொல். iii. இடைச்சொல். iv. உரிச்சொல்.

## பெயர்ச்சொல்.

49. பெயர்ச் சொல்லாவது யாது?
ஒருபொருளுக்குப் பெயராய் வருவது. (உ-ம். புத்தகம்.)

## இடுகுறி—காரணப்பெயர்.

50. இடுகுறிப் பெயர்—என்றால் என்ன? உதாரணம் தருக.
ஒரு பொருட்குக் காரணம் இன்றி இட்ட பெயர். உ-ம். மரம்

51. காரணப் பெயர் என்றால் என்ன? உதாரணம் தருக.
ஒரு பொருளுக்குக் காரணம் பற்றி இட்ட பெயர்.
உ-ம். பறவை (பறக்கும் காரணம் பற்றியது)

52. இடுகுறிப் பெயர்—காரணப்பெயர்—இவற்றின் வகைகள் யாவை? உதாரணம் தந்து விளக்குக.
ஒவ்வொன்றும் பொது சிறப்பு என இருவகைப்படும்.
i. இடுகுறிப் பொது:- உ-ம். மரம். (காரணம் இல்லை; எல்லா மரத்திற்கும் பொது)
ii. இடுகுறிச்சிறப்பு:- உ-ம் பலா (காரணம் இல்லை; பலா மரத்தையே சிறப்பாகக் குறிக்கும்)
i. காரணப் பொது:- உ-ம். அணி (அணியப்படும் காரணம் பற்றியது; எல்லா ஆபரணத்திற்கும் பொது)
ii. காரணச்சிறப்பு:- உ-ம். வளையல் (வளைந்திருக்கும் காரணம் பற்றியது; வளையலாகிய ஆபரணத்தையே சிறப்பாகக் குறிக்கும்)

## பலவகைப் பெயர்ச் சொற்கள்

### I. பொருளாதி அறுவகைப் பெயர்.

53 பொருளாதி அறுவகைப்பெயர்கள் யாவை? உதாரணந்தருக.

i. பொருட் பெயர் (பொருளுக்குப் பெயராய் வருவது)
உ-ம் இராமன், புத்தகம்.

ii. இடப் பெயர் (இடத்திற்குப் பெயராய் வருவது)
உ-ம். மதுரை, வீடு.

iii. காலப்பெயர் (காலத்திற்குப் பெயராய் வருவது)
உ-ம் காலை, மாலை.

iv சினைப்பெயர் (உறுப்பிற்குப் பெயராய் வருவது)
உ-ம் கண், இலை.

v. குணப் பெயர் (குணத்திற்குப் பெயராய் வருவது)
உ-ம். வெண்மை, அழகு.

vi. தொழிற் பெயர் (தொழிலுக்குப் பெயராய் வருவது)
உ-ம். படித்தல், கேட்டல்.

### 2 கிளைப் பெயர்.

54. கிளைப் பெயர் என்றால் என்ன? உதாரணம் தருக.

தம் குலத்தவன், தம் கோத்திரத்தவன், தம்மைச் சேர்ந்தவன் என்பதைக் காட்டும் பெயர்களாம். உ-ம். தமன் தமள், தமர், முதலியன.

### 3. சாதிப் பெயர்.

55. சாதிப் பெயர் என்றால் என்ன? உதாரணம் தருக.

சாதிக்குப்பெயராய் வருவதாம். உ-ம். அந்தணன், வணிகன் முதலியன.

### 4. அளவுப் பெயர்.

56. அளவுப் பெயராவது யாது? அளவைகளின் வகைகள் யாவை? விளக்கி உதாரணம் தருக.

ஒருபொருளின் அளவைக் காட்டும்பெயராகும். அளவைகள் நான்காம்; அவை:

i. எண்ணலளவை (எண்ணி அளப்பது)உ-ம். ஒன்று, பத்து
ii நிறுத்தலளவை (நிறுத்து அளப்பது) உ-ம். சேர், பலம்.
iii முகத்தலளவை (முகந்து அளப்பது) உ-ம். படி, உழக்கு.
iv நீட்டலளவை (நீட்டி அளப்பது) உ-ம். கஜம், முழம்.

5. தன்மைப் பெயர்.

57. தன்மைப் பெயர் என்றால் என்ன? உதாரணம் தருக,

பேசுவோன், தன்னைப் பற்றியோ, தன்னோடு பிறரைச் சேர்த்தோ சொல்லுஞ் சொல்லாகும். உ-ம். நான், நாங்கள்.

6. முன்னிலைப் பெயர்.

58. முன்னிலைப் பெயர் என்றால் என்ன? உதாரணம் தருக.

பேசுவோன், தன் முன்னே நிற்பவனையோ, அவனோடு பிறரைச் சேர்த்தோ சொல்லுஞ் சொல்லாகும். உ-ம். நீ. நீங்கள்.

7. படர்க்கைப் பெயர்.

59, படர்க்கைப் பெயர் என்றால் என்ன? உதாரணம் தருக.

தன்மை, முன்னிலைகளில் செல்லாது அயலானிடம் படரும் (செல்லும்) சொல்லாகும். உ-ம். அவன், அவர்கள்,

8 பொதுப் பெயர்.

60. பொதுப்பெயர் என்றால் என்ன?

திணை, பால் இடங்கட்குப் பொதுவாக வழங்கும் பெயர்களாம். (இவை பின் விளக்கப்படும்)

9. வினையாலணையும் பெயர்.

61 வினையாலணையும் பெயர் என்றால் என்ன? உதாரணம்கொண்டு விளக்குக.

ஒரு வினை முற்று பெயராக மாறி வேற்றுமை உருபை ஏற்றோ ஏற்காமலோ வருவது வினையாலணையும் பெயராம். இராமன் படித்தான் —இதில் 'படித்தான்' -என்பது வினை முற்று.

"படித்தான் தேறினான்" இதில் 'படித்தான்' என்ற வினைமுற்று தேறினான் என்ற வினைமுற்றைக் கொண்டு முடியாது. ஆதலின் 'படித்தான், என்ற வினைமுற்று படித்தவனாகிய இராமன் என்ற பொருளுடன் பெயராகமாறுகிறது. ஆதலால் 'படித்தான்' வினையாலணையும் பெயர்.

'படித்தானைக் கண்டேன்'-இதில் 'படித்தானை' என்பது இரண்டாம் வேற்றுமை உருபை ஏற்ற வினையாலணையும் பெயர்.

## திணை

62. திணையாவது யாது? அதன் வகைகள் யாவை?

பொருள்களின் பிரிவைக் காட்டுவது திணையாகும். அதன் வகை இரண்டு:

i. உயர் திணை (உயர்வாகிய பொருள்களின் பிரிவு)

ii அஃறிணை அல் + திணை = அஃறிணை: உயர்வல்லாத பொருள்களின் பிரிவு)

63. உயர் திணையில் அடங்கிய பொருள்கள் யாவை?

மக்கள், தேவர், நரகர். (பாவத்தால் நரகலோகத்திருப்போர்)

64. அஃறிணையில் அடங்கிய பொருள்கள் யாவை?

i. மக்கள், தேவர், நரகர் தவிர்ந்த உயிர் உள்ள பொருள்கள்

ii. உயிரில்லாத பொருள்கள்.

## பால்

65. 'பால்' என்றால் என்ன?

திணையின் உட்பகுப்பு 'பால்' எனப்படும்.

66. பால் எத்தனை வகைப்படும்? விளக்கி உதாரணம் தருக.

பால் ஐந்துவகைப்படும். அவை:

i. ஆண்பால்-ஓர் ஆண்மகனைக் குறிப்பது. உ-ம். இராமன்.
ii பெண்பால்-ஒரு பெண்மகளைக் குறிப்பது. உ-ம். சீதை.
iii பலர் பால்-ஆண்மக்கள் பலரையோ பெண்மக்கள் பலரையோ ஆணும் பெண்ணும் கலந்த பலரையோ குறிப்பது. உ-ம். அவர்கள்.
iv ஒன்றன் பால்-ஓர் அஃறிணைப் பொருளைக் குறிப்பது. உ-ம் அது
v. பலவின் பால்: பல அஃறிணைப் பொருளைக் குறிப்பது உ-ம். அவை.

67. உயர்திணை அஃறிணைகட்கு முறையே உரிய பால்கள் எவை?
உயர்திணைக்குரிய பால்கள் மூன்று:
(1) ஆண்பால், (2) பெண்பால், (3) பலர்பால்.
அஃறிணைக்குரிய பால்கள் இரண்டு.
(1) ஒன்றன் பால் (2) பலவின்பால்.

68. அஃறிணையிலும் ஆண் பெண் இருக்கவும் ஏன் அப்பகுப்புக் கொள்ளப்படவில்லை?
i. அஃறிணை உயிர்ப்பொருள்களில் புழு முதலிய சிலவற்றில் ஆண் பெண் காண முடியாது.
ii அஃறிணை உயிரில் பொருள்கட்கோ ஆண் பெண் பகுப்பு இல்லை.
iii உயர் திணையில் பெயர்ச்சொல்லிலும் வினைச்சொல்லிலும் ஆண் பெண் பகுப்பு காணமுடியும்: ஆனால் அஃறிணையில் பெயர்ச்சொல்லில்மட்டுமே காணமுடியும்; வினைச்சொல்லில் காணமுடியாது.

## எண்

69. எண் என்பது என்ன? அது எத்தனை?
பொருள்களின் எண்ணிக்கையைக் குறிப்பது எண்ணாகும்.
எண் இரண்டு. i. ஒருமை ii. பன்மை.

70. எண் கொள்ளப்படுவதில் தமிழுக்கும் வடமொழிக்கும் உள்ள வேறுபாடு என்ன?

தமிழில் ஒன்றுக்கு மேற்பட்டது பன்மை.
வடமொழியில் இரண்டுக்கு மேற்பட்டதே பன்மை.

71. ஒருமை, பன்மைகட்கு முறையே உரிய பால்கள் எவை?
ஒருமைக்குரிய பால்கள்: ஆண்பால், பெண்பால், ஒன்றன் பால். பன்மைக்குரிய பால்கள்: பலர்பால், பலவின்பால்.

## இடம்.

72. இடம் என்பது யாது? அது எத்தனை?
சொற்கள் வழங்குவதற்குரிய இடம் 'இடம்' எனப்படும்.
இடங்கள் மூன்று: i. தன்மை, ii முன்னிலை, iii. படர்க்கை

73. தான், தாம், எல்லாம் – இவை பொதுப் பெயராவதை உதாரணங் கொண்டு விளக்குக.
i. தான்–இருதிணை, ஆண் பால், பெண் பால், ஒன்றன்பால் மூவிடங்கள் இவற்றிற்குப் பொதுவாய் வரும்.
உ-ம் அவன்தான், அவள்தான், அதுதான் (திணை, பால்)
நான்தான், நீதான், அவன்தான் (மூவிடம்)
ii. தாம், iii. எல்லாம் } இருதிணை, பலர்பால், பலவின் பால், மூவிடங்கள் இவற்றிற்குப் பொதுவாய் வரும்.
உ–ம் அவர்தாம், அவைதாம், (திணை, பால்)
நாம்தாம், நீர்தாம், அவர்தாம், (மூவிடம்)
அவரெல்லாம், அவையெல்லாம் (திணை, பால்)
யாமெல்லாம், நீரெல்லாம், அவரெல்லாம் (மூவிடம்)

## வேற்றுமை.

74. வேற்றுமை என்பது என்ன? உதாரணங்கொண்டு விளக்குக. ஒரு பெயர்ச் சொல்லின் பொருளை வேறு படுத்துவது வேற்றுமையாகும்.
இராமன் — இது ஒரு பெயர்ச்சொல். அது 'இராமன் கண்டான்' என்றவிடத்து எழுவாய்ப் பொருளாக வேறுபட்டது. 'இராமனைக் கண்டான்' என்னுமிடத்து 'ஐ' என்ற

வேற்றுமை யுருபுவந்து 'இராமன்' செயப்படுபொருளாகுமாறு வேறுபடுத்தியது. ஆதலின் வேற்றுமை.

75. 'உருபு'—என்றால் என்ன?
வேற்றுமையை அறிவிக்கும் சொல் உருபு எனப்படும்.

76. வேற்றுமை எத்தனை?
முதல் வேற்றுமை முதல் எட்டாம் வேற்றுமை முடிய எட்டாம்.

77. முதல் வேற்றுமை எவ்வாறு வரும்? உதாரணம் தருக.
யாதொரு மாறுபாடும் இல்லாத பெயராய் வினை, பெயர் வினா இவற்றுள் ஒன்றைப் பயனிலையாகக் கொண்டு எழுவாய்ப் பொருளில் வரும்.

உ—ம். இராமன் படித்தான். [வினை கொண்டு முடிந்தது]
இராமன் அவன் [பெயர் கொண்டு முடிந்தது]
இராமன் யார்? [வினாவைக் கொண்டு முடிந்தது]

78. இரண்டாம் வேற்றுமைக்குரிய உருபும் பொருளும் யாவை? உதாரணம் தருக.
இரண்டாம் வேற்றுமை யுருபு 'ஐ' என்பதாம்.

| பொருள். | உதாரணம் |
|---|---|
| 1. ஆக்கல் | வீட்டைக் கட்டினான் |
| 2. அழித்தல் | வீட்டை இடித்தான் |
| 3. அடைதல் | வீட்டை அடைந்தான் |
| 4 நீத்தல் [விடுதல்] | வீட்டை விட்டான் |
| 5 ஒத்தல் | புலியைப் போன்றான் |
| 6 உடைமை | பொருளை உடையான் |

112656

79. மூன்றாம் வேற்றுமைக்குரிய உருபும் பொருளும் யாவை? உதாரணம் தருக.
மூன்றாம் வேற்றுமை உருபுகள்: ஆல், ஆன், ஒடு, ஓடு, [உடன், கொண்டு] என்பனவாம்.

பொருள். உதாரணம்.

i கருவி: படிப்பால் உயர்ந்தான் [உயர்தற்குக்கருவி படிப்பு]

ii கருத்தா: இராமனால் எழுதப்பட்டது. [எழுதுதற்குக் கர்த்தா இராமன்.

iii உடனிகழ்ச்சி: [ஒரு தொழில் பல பொருளிடத்தும் உடன் நிகழ்வது.] } இராமனுடன் சீதையும் இலக்குவனும் சென்றார்.

80. நான்காம் வேற்றுமையின் உருபும் பொருளும் யாவை? உதாரணம் தருக,

நான்காம் வேற்றுமை யுருபு 'கு' [பொருட்டு, ஆக, நிமித்தம்.]

| பொருள். | உதாரணம். |
|---|---|
| 1. கொடை. | பாரி முல்லைக்குத் தேர் கொடுத்தான். |
| 2. பகை. | பாம்புக்குப் பகை கீரி. |
| 3. நட்பு. | இராமனுக்கு நண்பன் குகன். |
| 4. தகுதி. | அரசருக்கு உரியது முடி. |

5 அதுவாதல், மோதிரத்துக்குப் பொன் [இங்கே பொன் உருவத்தில் மாறிக் குணத்தில் மாறாமை காண்க.]

| | |
|---|---|
| 6. பொருட்டு. | கூலிக்கு வேலை செய்தான். |
| 7. முறை. | இராமனுக்குத் தந்தை தசரதன். |

81. ஐந்தாம் வேற்றுமையின் உருபும் பொருளும் யாவை? உதாரணம் தருக.

ஐந்தாம் வேற்றுமை உருபுகள். இல் இன், [நின்று, இருந்து] என்பன.

| பொருள். | உதாரணம். |
|---|---|
| 1. நீங்கல். | மலையிலிருந்து அருவி வீழ்ந்தது. |
| 2. ஒப்பு. | காக்கையில் கரியது களாம்பழம். |
| 3. எல்லை. | சீர்காழியின் வடக்குச் சிதம்பரம். |
| 4. ஏது (காரணம்) | கல்வியிற் பெரியவன் கம்பன். |

82. ஆறாம் வேற்றுமையின் உருபும் பொருளும் யாவை?

ஆறும் வேற்றுமை உருபுகள்: அது, ஆது, அ [உடைய]
பொருள்: கிழமை (சம்பந்த)ப் பொருள்.

83 கிழமை எத்தனை? உதாரணத்துடன் விளக்குக.

கிழமை இரண்டு.

i தற்கிழமை: தன்னை விட்டுப் பிரியாத பொருளோடு ஏற்பட்ட சம்பந்தம். உ-ம் இராமனது கண். இங்கே இராமனுக்குக் கண்ணுடன் ஏற்பட்ட சம்பந்தம் பிரியாதது.

ii பிறிதின் கிழமை: தன்னை விட்டு வேறாக நிற்கும் பொருளுடன் ஏற்பட்ட சம்பந்தம். உ-ம் இராமனது புத்தகம். இங்கே இராமனுக்குப் புத்தகத்துடன் ஏற்பட்ட சம்பந்தம் பிரிந்தது.

84. ஆறும் வேற்றுமையின் தற்கிழமை-பிறிதின்கிழமை எவ்வாறு வரும்? உதாரணங் கொண்டு விளக்குக.

தற்கிழமை.

| வரு விதம். | உதாரணம். |
|---|---|
| 1. சினை | இராமனது கண். |
| 2 குணம். | இராமனது அழகு. |
| 3. தொழில் | இராமனது வருகை. |
| 4. ஒன்றன் கூட்டம். ஒரே பொருளின் கூட்டம். | நெல்லினது குவியல். |
| 5 பலவின் ஈட்டம். பலவிதப்பொருளின் கூட்டம் | தானியங்களது குவியல். |
| 6. திரிபின் ஆக்கம். | மஞ்சளது பொடி. |

[ஒரு பொருள் வடிவில் மாறி அமைதல்.]

பிறிதின் கிழமை

| வரும் விதம் | உதாரணம். |
|---|---|
| 1, பொருள். | இராமனது புத்தகம். |
| 2. இடம் | இராமனது ஊர். |
| 3. காலம், | இராமனது நாள். |

85. ஏழாம் வேற்றுமை உருபும் பொருளும் யாவை?

ஏழாம் வேற்றுமை உருபுகள்: கண், கால், இடம் முதலியன.
பொருள்: இடப்பொருள்.

86. ஏழாம் வேற்றுமை இடப்பொருள் எங்ஙனம் வரும்? உதாரணம் தருக.

இடப்பொருள். பொருளாதி அறுவகைப் பெயர்களையும் அடிப்படையாகக் கொண்டு இருகிழமைகளிலும் வரும்.

| | தற்கிழமை. உ-ம். | பிறிதின் கிழமை. உ-ம். |
|---|---|---|
| 1. பொருள். | மணியின்கண் ஒளி. | மரத்தின்கண் கிளி. |
| 2. இடம். | ஊரின்கண் வீடு. | வானத்தின்கண் பறவை |
| 3. காலம். | நாளின்கண் நாழிகை. | காரின்கண் பயிர். |
| 4. சினை. | கையின்கண் விரல். | விரலின்கண் மோதிரம் |
| 5. குணம் | கருப்பின்கண் அழகு. | முதுமையின்கண் வறுமை. |
| 6. தொழில். | ஆடலின்கண் அபிநயம். | ஆடலின் கண் பாட்டு. |

87. எட்டாம் வேற்றுமை எங்ஙனம் வரும்? உதாரணம் தருக.

இவ்வேற்றுமை, இயல்பாதலும், ஈறுமிகுதலும், கெடுதலும், திரிதலும், கடைசி எழுத்துக்கு அடுத்த எழுத்துத்திரிதலும் ஆகிய தன்மைகளைப் பெற்று ஒருவரை அழைக்கும் பொருளில் வரும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | தம்பி — தம்பி. | (இயல்பு) |
| | அன்பன் — அன்பனே. | (ஈறு மிகுதல்) |
| | அன்பன் — அன்ப. | (ஈறு கெடுதல்) |
| | பிள்ளை — பிள்ளாய். | (ஈறு திரிதல்) |
| | மக்கள் — மக்காள். | (ஈற்றயல் திரிதல்) |

88. உருபு ஏற்கும்போது எவ்வெப் பெயர்கள் எங்ஙனம் திரியும்?

| பெயர் | திரியும் விதம். | உருபு ஏற்றது. |
|---|---|---|
| தான் | தன் | தன்னை |
| தாம் | தம் | தம்மை |
| நாம் | நம் | நம்மை |
| யான் | என் | என்னை |
| யாம் | எம் | எம்மை |
| நீ | நின், உன் | நின்னை, உன்னை |
| நீர் | நும், உம் | நும்மை, உம்மை. |

## வினைச்சொல்.

89. வினைச்சொல்லாவது யாது?

ஒருபொருளின் செயலைக்காட்டுஞ் சொல் வினைச்சொல்லாம்.

90. வினைச் சொல் எத்தனை வகைப்படும்?

இருவகைப்படும். i. முற்று வினை. ii. எச்சவினை.

## முற்று வினை

91. "முற்றுவினை" என்பது என்ன? உதாரணங் கொண்டு விளக்குக

தன்பொருள் முடிய வேறுசொல்லை வேண்டாது பொருள் முற்றி நிற்கும்வினை முற்றுவினையாகும்.

உ-ம். இராமன் படித்தான். இங்கே 'படித்தான்' என்ற வினைச் சொல் வேறுசொல்லை வேண்டாது பொருள் முற்றுப் பெற்று நிற்பதால் முற்றுவினை.

92. முற்றுவினை எத்தனை வகைப்படும்? அவை யாவை? உதாரணந் தருக.

ஐந்து வகைப்படும்; அவை: உதாரணம்.

i. தன்மைவினை முற்று. படித்தேன்.

ii. முன்னிலை வினைமுற்று. படித்தாய்.

iii. படர்க்கை வினைமுற்று. படித்தான்.
iv. ஏவல் வினைமுற்று. படி.
v. வியங்கோள் வினைமுற்று. கற்க.

93. முன்னிலைக்கும் ஏவலுக்கும் உள்ள வேறுபாடென்ன?

முன்னிலை வினைமுற்று முன்னே நிற்கும் பொருளின் தொழிலை மட்டும் குறிக்கும்.

ஏவல்வினைமுற்று முன்னே நிற்கும் பொருளைத் தொழில் செய்யுமாறு கட்டளையிடும்.

94. ஏவலுக்கும் வியங்கோளுக்கும் உள்ள வேறுபாடென்ன?

1. ஏவல் முன்னிலையில் மட்டும் வரும்.
வியங்கோள் மூவிடத்திலும் வரும்.
2. ஏவலில் ஒருமை பன்மை என்ற வேறுபாடு உண்டு.
வியங்கோளில் அவ்வேறுபாடு இல்லை.
3. ஏவல் கட்டளைப் பொருளில் மட்டுமே வரும்.
வியங்கோள் கட்டளை, வாழ்த்தல், வைதல், வேண்டல் என்ற பொருள்களில் வரும்.

### எச்ச வினை.

95. எச்ச வினை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை? உதாரணம் தந்து விளக்குக.

தன் பொருள் முடிவதற்குப் பெயரையோ, வினையையோ விரும்பிநிற்கும் வினை எச்சவினையாகும்.

அதன் வகை இரண்டு:

i. பெயரெச்சம். ii வினையெச்சம்.

1. படித்த பையன்: இங்கே 'படித்த' என்னும் வினை, தன்பொருள் முடிவதற்குப் 'பையன்' என்ற பெயரை விரும்பி நிற்பதால், இது பெயரெச்சம்.

2. படித்து வந்தான். இங்கே 'படித்து' என்னும் வினை, தன்பொருள் முடிவதற்கு 'வந்தான்' என்னும் வினையை விரும்பி நிற்பதால் இது வினையெச்சம்.

## பகுபத வுறுப்பு.

96. பகுபத வுறுப்பு என்பது என்ன?

பிரிக்கக் கூடிய சொல்லில் உள்ள பல பிரிவுக்குப் பகுபத வுறுப்பு என்று பெயர்.

97. பகுபத வுறுப்புக்கள் எவை? நன்கு விளக்குக.

பகுபத வுறுப்புகள் ஆறு:

1. பகுதி: இது பகுபதத்தின் முதலில் நிற்பது; அது பகாப்பதமாய் இருக்கும்; பெயர்ச்சொல்லானால் பகுதி பொருளாதி அறுவகைப்பெயரில் ஒன்றாயிருக்கும்; வினைச் சொல்லானால் பகுதி ஏவலாயிருக்கும்.
2. விகுதி: இது பகுபதத்தின் கடையில் நிற்பது: இதனால் திணை, பால், எண், இடம் இவற்றை அறியலாம்.
3. இடை நிலை: இது பகுதிக்கும், விகுதிக்கும் இடையில் நிற்பது. வினையிடைநிலையாயின் காலத்தை அறியலாம். பெயரிடைநிலையாயின் காலம் இல்லை.
4. சாரியை: இது இடைநிலைக்கும். விகுதிக்கும் இடையே சார்ந்து இயைந்து வருவது: இது சில சொற்களுக்கு அவசியமாயிருக்கும்: சில சொற்களில் அவசியம் இல்லையெனும் இனிமைக்காக வரும்.
5. சந்தி: இது பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே சந்தித்து நிற்பது.
6. விகாரம்: சந்தி எழுத்தான வல்லெழுத்து மெல்லெழுத்தாகவோ, மெல்லெழுத்து வல்லெழுத்தாகவோ ஆதல் போல்வன.

## காலம்.

98. காலம் எத்தனை வகைப்படும்? எங்ஙனம்? விளக்குக.

காலம் மூன்று வகைப்படும். அவை:

| | |
|---|---|
| i. இறந்த காலம் | தொழில் நடந்ததைக் குறிப்பது. |
| ii. நிகழ் காலம் | தொழில் நடக்கிறதைக் குறிப்பது. |
| iii. எதிர் காலம் | தொழில் நடப்பதைக் குறிப்பது. |

99. மூன்று காலங்கட்கும் முறையே உரிய இடைநிலைகள் எவை? உதாரணங் காட்டுக.

இறந்தகால இடைநிலைகள்: த், ட், ற், இன்.
உ-ம். நடந்தான், உண்டான், சென்றான், பாடினான்.

நிகழ்கால இடைநிலைகள்: ஆநின்று, கின்று, கிறு.
உ-ம். நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான்.

எதிர்கால இடைநிலைகள்: ப், வ்.
உ-ம். நடப்பான், செய்வான்,

திணை, பால், எண், இடம் காட்டும் விகுதிகள்.

100. ஆண்பால், பெண்பால், பலர்பால்-இவற்றைக் காட்டும் விகுதிகள் எவை? உதாரணம் தருக.

ஆண்பாலைக் காட்டும் விகுதிகள்: அன், ஆன்.
உ-ம். படித்தனன், படித்தான்.

பெண்பாலைக் காட்டும் விகுதிகள்: அள், ஆள்.
உ-ம். படித்தனள், படித்தாள்.

பலர் பாலைக் காட்டும் விகுதிகள்: அர், ஆர், ப.
உ-ம். படித்தனர், படித்தார், படிப்ப. (படிப்பார்)

101. ஒன்றன் பால், பலவின் பால் இவற்றைக் காட்டும் விகுதிகள் எவை? உதாரணம் தருக.

ஒன்றன்பாலைக் காட்டும் விகுதிகள்: து, று.
உ-ம். போயது, போயிற்று.

பலவின்பாலைக் காட்டும் விகுதிகள்: அ, ஆ.
உ-ம். வந்தன, வாரா.

102. தன்மை ஒருமை-தன்மைப் பன்மை இவற்றிற்குரிய விகுதிகள் யாவை? உதாரணம் தருக.

தன்மை ஒருமை விகுதிகள்: அன், என் முதலியன

உ-ம். படித்தனன், படித்தேன்.

தன்மைப் பன்மை விகுதிகள்: அம், ஓம் முதலியன.

உ-ம். படித்தனம், படித்தோம்.

103. முன்னிலை ஒருமை-முன்னிலைப்பன்மை இவற்றிற்குரிய விகுதிகள் யாவை? உதாரணந் தருக.

முன்னிலை யொருமை விகுதிகள்: ஐ, ஆய் முதலியன.

உ-ம். படித்தனை, படித்தாய்.

முன்னிலைப் பன்மை விகுதிகள்: இர், ஈர்.

உ-ம். படித்தனிர், படித்தீர்.

104 ஏவலொருமை-ஏவற்பன்மை விகுதிகள் யாவை? உதாரணம் தருக.

ஏவலொருமை விகுதி 'ஆய்' உ-ம். படிப்பாய்.

ஏவற்பன்மை விகுதிகள்: மின். உம், ஈர்.

உ-ம் படிமின். படியும், படிப்பீர்.

105, வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை? உதாரணம் தருக.

வியங்கோள் வினைமுற்று விகுதிகள்: க, இய, இயர்.

உ-ம் வாழ்க. வாழிய, வாழியர்.

## தன்வினை—பிறவினை.

106. 'தன்வினை' என்றால் என்ன? விளக்கி உதாரணம் தருக.

எழுவாய் (கருத்தா) தானே செய்யும் வினைக்குத் தன்வினை என்று பெயர்.

உ-ம். இராமன் படித்தான். இங்கே படித்தலாகிய செயலைச் செய்தவன் எழுவாயான இராமனே யாதலின் 'படித்தான்' தன்வினை.

107. 'பிறவினை' என்றால் என்ன? விளக்கி உதாரணந் தருக.

கருத்தா பிறரைக் கொண்டு செய்விக்கும் வினைக்குப் பிறவினை என்று பெயர்.

உ-ம். இராமன் படிப்பித்தான் - இங்கே படித்தலாகிய செயலை எழுவாயான இராமன் பிறனொருவனால் செய்வித்தலின் பிறவினை.

108. பிறவினை எவ்வாறு வரும்? விளக்கி உதாரணம் தருக.

1. தன்வினைப் பகுதியுடன் பி, வி என்ற விகுதிகள் இடையில் சேர்ந்து வருவது.

உ-ம் படிப்பித்தான்-இங்கே 'படி' என்ற பகுதியுடன் 'பி' விகுதி சேர்ந்தது' செல்வித்தான், இங்கே 'செல்' என்ற பகுதியுடன் 'வி' விகுதி சேர்ந்தது.

2 சிலவினைப் பகுதியுடன் கு, சு, டு, து, பு, று என்ற விகுதிகளுள் ஒன்றைப் பெற்று வருவது.

உ-ம். போக்கு, பாய்ச்சு, உருட்டு, புகுத்து, எழுப்பு, அகற்று.

3. சிலவினைச்சொற்களில் மெல்லினமெய், வல்லினமெய்யாகி வருவது.

உ-ம்: இறங்கு-இறக்கு, திருந்து-திருத்து, திரும்பு-திருப்பு

4. சிலவினைச் சொற்களில் வல்லினமெய் இரட்டித்து வருவது.

உருகு உருக்கு, கூடு-கூட்டு.

உடன்பாடு—எதிர்மறை

109. உடன்பாட்டு வினை என்றால் என்ன? விளக்கி உதாரணங்கள் தருக.

வினைச்சொல்லிலுள்ள தொழில் நடத்தல் உள்ளதாயின் உடன்பாட்டு வினையாம். [உடன்பாடு முற்றுவினை, எச்சவினை இரண்டிலும் உண்டு.]

உ-ம். படித்தான் [முற்றுவினையில் உடன்பாடு.]

படித்த (பையன்) [எச்சவினையில் உடன்பாட்டுப் பெயரெச்சம்]

படித்து (வந்தான்) எச்சவினையில் உடன்பாட்டு வினை எச்சம்)

110. எதிர்மறை வினை என்றால் என்ன?

விளக்கி உதாரணங்கள் தருக.

வினைச் சொல்லிலுள்ள தொழில் நடத்தல் இல்லையாயின் எதிர்மறை வினையாம் [எதிர் மறையும் முற்று வினை எச்ச வினை இரண்டிலும் உண்டு.]

உ-ம். படித்திலன் (முற்றுவினையில் எதிர்மறை)

படிக்காத (பையன்) [எச்சவினையில் எதிர்மறைப் பெயரெச்சம்]

படிக்காது (வந்தான்) [எச்சவினையில் எதிர்மறை வினையெச்சம்]

## இடைச்சொல்.

111. இடைச் சொல்லாவது யாது?

தனியே வாராது பெயர் வினைகளை அடுத்து அவற்றின் *இடமாக வருவது.

112. இடைச்சொற்களின் வகைகள் எவை? வகைக்கு ஒவ்வோர் உதாரணந் தருக.

1. வேற்றுமை உருபுகள். 2, விகுதிகள். 3, இடைநிலைகள். 4. சாரியைகள். 5. உவம உருபுகள். 6. அசைநிலைகள் முதலியன

1. இராமனைக் கண்டான். 'ஐ' வேற்றுமை உருபு.
2. உண்டான் [உண்+ட்+ஆன்] 'ஆன்' விகுதி.
3. உண்டான் [உண்+ட்+ஆன்] 'ட்' இடைநிலை.
4. உண்டனன் [உண்+ட்+அன்+அன்] 'அன்' சாரியை.
5. பால் போலப் பேசினான். 'போல' உவம உருபு.
6. "தளர்ந்து வளையுமோ தான்" 'தான்' அசை நிலை.

---

*இடம் என்பதற்கு (பெயர் வினைகளின்) மூலம் என்று பொருள். இடச்சொல்லுக்கும் இதற்கும் வேறுபாடு தெரிவதற்காக இடைச்சொல் எனப்பட்டது.

## உரிச்சொல்.

**113.** உரிச்சொல் என்றால் என்ன?

பெயர் வினைகளுக்கு உரிமையாய் அவற்றின் குணத்தை உணர்த்துவது உரிச் சொல்லாகும்.

**114.** உரிச்சொல் எத்தனை வகைப்படும்?

உதாரணம் தந்து விளக்குக.

i. ஒரு குணந் தழுவிய பல உரிச்சொல்.

ii. பல குணந் தழுவிய ஓர் உரிச்சொல்.

உதாரணம்.

| | | |
|---|---|---|
| சாலப் பேசினான் | சால | மிகுதி என்ற ஒரு குணம் தழுவிய பல உரிச் சொற்கள். |
| உறு புகழ் | உறு | |
| தவப் பெரிது | தவ | |
| நனி தின்றான் | நனி | |
| கூர் இருள் | கூர் | |
| கழி நுட்பம் | கழி | |
| கடி நகர் | காவல் | பல குணம் தழுவிய 'கடி' என்ற ஓர் உரிச்சொல். |
| கடி மலர் | வாசனை | |
| கடிப் பேய் | அச்சம் | |
| கடி முரசு | ஒலி | |

SB
3-96

## III. புணர்ச்சி.

115. புணர்ச்சி யாவது யாது?

ஒரு சொல்லுடன் மற்றொரு சொல் சேர்வதாம்.

116. நிலை மொழி—வருமொழி இவற்றை விளக்கி உதாரணம் தருக.

சொற்கள் ஒன்றோடொன்று சேருமிடத்து முதலில் நிற்கும் சொல் நிலைமொழி: அந் நிலைமொழியை நோக்கி வரும் சொல் வருமொழி.

உ-ம். இராமன்+படித்தான். இங்கே 'இராமன்' நிலை மொழி. 'படித்தான், வருமொழி.

117. சொற்கள் ஒன்றோடொன்று புணரும் முறை யாது?

நிலை மொழியின் கடைசி எழுத்தும், வரு மொழியின் முதல் எழுத்தும் சேரும்.

118. நிலைமொழி யீறு எத்தனை? எங்ஙனம்?

நிலைமொழி யீறு இரண்டு.

i. உயிர் ஈறு [படித்த (பையன்)]
த்+அ
ii. மெய்யீறு [பையன் (வந்தான்)]

119. வருமொழி முதல் எத்தனை? எங்ஙனம்?

வருமொழி முதல் இரண்டு.

i. உயிர் முதல் [(இராமன்) அழகன்]
ii. மெய்ம் முதல் [(இராமன்) கற்றான்]
க்+அ

120. நிலை மொழியும் வருமொழியும் தம்முள் சேர்வதால் உண்டாகும் புணர்ச்சிகள் எத்தனை? வகைக்கு ஒருதாரணம் தருக.

அப்புணர்ச்சி நான்காகும்.

| புணர்ச்சி. | உதாரணம். | |
|---|---|---|
| | நிலைமொழி. | வருமொழி |
| 1. உயிருடன் உயிர் | கல்வி | அழகு. |
| 2. உயிருடன் மெய் | கற்ற | பையன். |
| 3. மெய்யுடன் மெய் | பையன் | வந்தான். |
| 4. மெய்யுடன் உயிர் | பையன் | அவன். |

### இயல்பு புணர்ச்சி—விகாரப் புணர்ச்சி.

121. இயல்பு புணர்ச்சி என்பது என்ன? உதாரணந் தருக.

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் யாதொரு மாறுபாடும் இல்லாமல் சேர்வதாம்.

உ-ம். கலை + மகள் = கலைமகள்.

பால் + ஆறு = பாலாறு என நிலைமொழி யீற்று மெய்யுடன் வருமொழி உயிர் சேர்ந்து வருவதும் இயல்பு புணர்ச்சியே.

122. விகாரப் புணர்ச்சி என்பது என்ன? அது எத்தனை வகைப் படும்? விளக்கி வகைக்கு ஒருதாரணந் தருக.

நிலைமொழியும், வருமொழியும் சேரும்போது ஏதேனும் ஒரு மாறுபாட்டுடன் சேர்வதாம்.

விகாரப் புணர்ச்சி மூன்று. அவை:

i. தோன்றல்: இரு மொழிகட்கும் இடையில் எழுத்தோ சாரியையோ தோன்றுதலாம்.

உ-ம். கலை + செல்வம் = கலைச் செல்வம்.

(எழுத்துத் தோன்றல்)

வண்டு + கால் = வண்டின் கால்

(சாரியை தோன்றல்)

ii. திரிதல்: இரு மொழியும் புணரும் போது நிலைமொழி யீற்றிலோ, வருமொழி முதலிலோ, இரண்டிலுமோ உள்ள எழுத்து ஒன்று மற்றொன்றாகத் திரிவதாம்.

உ-ம். கல் + பலகை = கற்பலகை.

கண் + நோக்கம் = கண்ணோக்கம்.

எள் + நெய் = எண்ணெய்.

iii கெடுதல்: இரு மொழியும் புணரும் போது ஏதேனும் ஒரெழுத்துக் கெடுவதாம்.

உ-ம். மரம் + கார் = மர கார்.

உயிர் முன் உயிர்.

உடம்படு மெய்.

123. உடம்படு மெய் என்பது என்ன?

நிலை மொழி யீற்றிலும், வருமொழி முதலிலும் உயிர் எழுத்து வரின் அவ்விரண்டுயிரும் சேராமையால் அவற்றை உடம்படுத்த (சேர்க்க) வரும் மெய் உடம்படு மெய்யாம்.

124. உடம்படு மெய்கள் எவை? அவை எவ்விடங்களில் எவ்வாறு வரும்? உதாரணந் தந்து விளக்குக.

உடம்படு மெய் இரண்டு. ய், வ்: என்பன

1. இ, ஈ, ஐ என்ற எழுத்துக்களில் ஒன்று நிலை மொழி யீற்றில் நிற்க, வரு மொழியில் உயிர் வரின் இடையில் 'ய்' உடம்படு மெய்யாக வரும்.

உ-ம். கிளி + அழகு = கிளியழகு.

தீ + எரிந்தது = தீயெரிந்தது.

பனை + ஓலை = பனையோலை.

2. இ, ஈ, ஐ என்ற மூன்றும் தவிர்ந்த ஏனைய உயிர் நிலை மொழி யீற்றில் நிற்க, வரு மொழியில் உயிர் வரின் இடையில் 'வ்' உடம்படு மெய்யாக வரும்.

உ-ம். பல + அரசர் = பலவரசர்.

பலா + இலை = பலாவிலை.

திரு + ஆரூர் = திருவாரூர்.

பூ + அழகு = பூவழகு.

கொ + அழகா = கொவ்வழகா.

போ + என்ருன் = போவென்ருன்.

கௌ + அழகு = கௌவழகு.

3. 'ஏ' நிலைமொழி யீற்றில் நிற்க வருமொழியில் உயிர் வரின் 'ய்', 'வ்' இரண்டும் உடம்படு மெய்யாக வரும்.

உ-ம். அவனே + அழகன் = அவனேயழகன்.

தே + அழகு = தேவழகு.

உயிர் முன் மெய் (I. வல்லினம்.)

125. நிலை மொழியீற்று உயிர்முன் வருமொழியில் வல்லினம் (க, ச, த, ப) வந்தால் எப்படிப் புணரும்? உதாரணம் தருக

i. உயிரீற்றின் முன் வல்லினமெய் வரின் வந்தமெய் பொதுவாக மிகும்.

உ-ம் வாழை + காய் = வாழைக்காய்

வாழை + சுருள் = வாழைச் சுருள்

வாழை + தார் = வாழைத் தார்

வாழை + பழம் = வாழைப் பழம்

ii. ஏ, ஓ, என்னும் இடைச் சொற்களை ஈருகக் கொண்ட நிலைமொழி முன் வல்லின மெய்வரின் இயல்பாகும்.

உ-ம். இவனே + கண்டான் = இவனே கண்டான்

இவனே + சென்ருன் = இவனே சென்ருன்

இவனே + தந்தான் = இவனே தந்தான்

இவனே + படித்தான் = இவனே படித்தான்

இவனோ + கொடுத்தான் = இவனோ கொடுத்தான்

[சென்ருன், தந்தான், படித்தான் இவற்றோடும் இவ்வாறே சேர்த்துக் கொள்க.]

iii. உயர்திணைப் பெயர், பொதுப் பெயர் (இருதிணைப் பொது) ஈற்றில் வரும் உயிர்முன் வல்லினம் வரின் இயல்பாகும்.

உயர்திணைப்பெயர்; உ-ம். நம்பி + கரியவன் = நம்பிகரியவன்
பொதுப்பெயர்; உ-ம். தந்தை + கரியவன் = தந்தை கரியவன்
சிறந்தவன், தக்கவன், படித்தவன் இவற்றோடும் இவ்வாறே சேர்த்துக் கொள்க.]

உயிர் முன் மெய் (II மெல்லினம்)

126. நிலைமொழியீற்று உயிர் முன் வருமொழியில் மெல்லினம் (ஞ, ந, ம,) வந்தால் எப்படிப் புணரும்? உதாரணந் தருக.
உயிரீற்றின் முன் மெல்லின மெய் வரின் இயல்பாகும்.

உ-ம் நல்ல + ஞானம் = நல்ல ஞானம்
நல்ல + நாள் = நல்ல நாள்
நல்ல + மனம் = நல்ல மனம்

உயிர் முன் மெய் ( iii இடையினம்.)

127. நிலைமொழியீற்று உயிர்முன் வருமொழியில் இடையினம் ( ய, வ, ) வரின் எப்படிப் புணரும்? உதாரணம் தருக.
உயிரீற்றின்முன் இடையின மெய்வரின் இயல்பாகும்.

உ-ம் கரிய + யானை = கரிய யானை
பெரிய + வாழை = பெரிய வாழை.

மெய்ம் முன் உயிர்.

128. நிலைமொழியீற்று மெய்ம்முன் வருமொழி முதலில் உயிர் வரின் எப்படிப் புணரும்?

i. மெய்ம்முன் உயிர்வரின் வந்த உயிர் நின்ற மெய்யுடன் சேரும்.

உ-ம். பால் + ஆறு = பாலாறு

ii. தனிக் குற்றெழுத்தை அடுத்த மெய்ம்முன் உயிர் வரின் அந்த மெய் இரட்டிக்கும் (இரண்டாகும்)

உ-ம், பொன் + ஆடை = பொன்னாடை.

## மெய்ம் முன் மெய்.

129. நிலைமொழியீற்றிலுள்ள மகரமெய்ம் முன் நாற்கணமும் (உயிர், வல்லினம், மெல்லினம், இடையினம்) வரின் எங்ஙனம் புணரும்?

i. நிலைமொழியீற்றிலுள்ள மகர மெய்யின் முன் நாற்கணத்துள் எதுவரினும் கெடும்; கெட்டு உயிரீறாய் நின்று உயிர் வரின் உடம்படுமெய்யும், வல்லினம் வரின் மிகுந்தும், மெல்லினம் இடையினம் வரின் இயல்பாயும் புணரும்.

மகரத்தின் முன் உயிர்: உ-ம் மரம்+அடி=மரவடி; 'ம்' கெட்டு 'வ'கர உடம்படுமெய் பெற்றது. [மரம்+அடி; மர+அடி=மரவடி]

மகரத்தின் முன் வல்லினம்: உ-ம். மரம்+கிளை=மரக்கிளை 'ம்' கெட்டு உயிரீறாய் வந்த எழுத்தே மிக்கது [மரம்+கிளை; மர+கிளை=மரக்கிளை]

மகரத்தின் முன் மெல்லினம்: உ-ம். மரம்+நார்=மர நார்; 'ம்' கெட்டு உயிரீறாய் நின்று பின் இயல்பாய்ப் புணர்ந்தது.

மகரத்தின் முன் இடையினம்: உ-ம். மரம்+வேர்=மரவேர் 'ம்' கெட்டு உயிரீறாய் நின்று பின் இயல்பாய்ப் புணர்ந்தது.

ii. நிலைமொழியீற்று மகரம் வல்லினம் வரின் சில விடங்களில் கெடாது வந்த வல்லெழுத்துக்கு இனமாகத் திரியும். [க-ங; ச-ஞ; த-ந; ப, ம இவை ஒன்று ஒன்றிற்கு இனம்]

உ-ம். மரம்+குறிது=மரங்குறிது.
மரம்+சிறிது=மரஞ்சிறிது
மரம்+தீது=மரந் தீது

130. குற்றியலுகரத்துடன் உயிரும், யகரமும் வரின், எங்ஙனம் புணரும்?

i. குற்றியலுகரத்தின் முன் உயிர் வந்தால் உகரம் கெடும். அவ்வாறுகெட, நின்றமெய்யுடன் வந்தவுயிர் சேரும்.

உ-ம். பட்டு + ஆடை = பட்டாடை. நிலைமொழி யீற்றுகரம் கெட்டு 'பட்ட்' என நின்றது: நின்றமெய்யுடன் வருமொழி 'ஆ'காரம் சேர்ந்து பட்டாடை என்றாயிற்று. [பட்டு + ஆடை; பட்ட் + ஆடை = பட்டாடை.]

ii. குற்றியலுகரத்தின் முன், யகரம் வந்தால் உகரம் இகரமாக மாறும்.

உ-ம். காடு + யாது = காடியாது.

## உறுப்பிலக்கணம் கூறுதல்.

I. 'உறுப்பிலக்கணம்' என்பது என்ன? உதாரணம் தந்து விளக்குக.

பகுபதத்திலுள்ள பகுதி, விகுதி முதலிய உறுப்புக்களைத் தனித்தனி பிரித்துக் காட்டுவதாம்.

உதாரணம்.

கூனன். கூன் + அன்: [கூன்—பகுதி, அன் — விகுதி]

உண்டான். உண் + ட் + ஆன். [உண் — பகுதி, ஆன்—விகுதி 'ட்' இடைநிலை.]

படித்தான்: படி + த் + த் + ஆன் [படி — பகுதி, ஆன் — விகுதி 'த்' இடை நிலை, 'த்' சந்தி]

படித்தனன்: படி + த் + த் + அன் + அன். [படி—பகுதி அன்—விகுதி 'த்' இடைநிலை, 'த்' சந்தி: 'அன்' சாரியை]

படிந்தனன்: படி + த் + த் + அன் + அன். [படி—பகுதி, அன்—விகுதி 'த்' இடைநிலை, 'த்' சந்தி அன்—சாரியை சந்தி 'த்' 'ந்' ஆகத் திரிந்தது விகாரம்.]

## புணரிலக்கணம் கூறுதல்.

II. 'புணரிலக்கணம்' என்பது என்ன? உதாரணந் தந்து விளக்குக.

பிரிந்து நிற்கும் இருசொற்களை இலக்கண விதிப்படி சேர்த்தலும், சேர்ந்து நிற்கும் இரு சொற்களைப் பிரித்து எவ்விதிப்படி அவை சேர்ந்தன என்று காட்டுதலும் ஆகும்.

i. பிரிந்த சொற்களைச் சேர்த்தல்.

உ-ம். 1. பூ+கொடி. 2. கல்+பலகை. 3. மரம்+வேர்.

1. 'பூ' என்ற நிலைமொழி யீற்றில் உயிர் இருக்க 'கொடி' என்ற வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அவ்வல்லினத்திற்கு இனமாகிய 'ங்' என்ற மெல்லினம் தோன்றிப் 'பூங்கொடி' என்றாயிற்று.

2. 'கல்' என்ற நிலைமொழியீற்று லகரம் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் 'ற்' ஆகத் திரிந்தது. [கல்+பலகை கற்பலகை.]

3 'மரம்' என்ற மெய்யீற்றின் முன் 'வேர்' என்ற வருமொழி முதலில் இடையினம் வந்தால் மகரமெய் கெட்டது.

ii. சேர்ந்த சொற்களைப் பிரித்தல்.

i. மட்குடம். ii. பஞ்சாலை.

1. மண்+குடம்=மட்குடம். 'மண்' என்ற நிலை மொழி யீற்று 'ண்'கரம் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் டகரமாகத் திரிந்தது.

2. பஞ்சு+ஆலை=பஞ்சாலை. 'பஞ்சு' என்ற நிலைமொழி யீற்று உகரம் வருமொழி முதலில் உயிர்வரக் கெட்டது. அவ்வாறு கெட்ட நின்ற மெய்யுடன் வருமொழி 'ஆ'கார உயிர் சேர்ந்து 'பஞ்சாலை' எனச்சேர்ந்தது.

TAMIL ...
112656

S·R·PRESS, TSI·
P·I·C·No·22· 14··9··46··750·